Crl.M.P. No. 39/2026 தேதி : 17.02.2026

PW1–ரகு த/பெ : மாரியப்பன்

**சத்தியபிரமாண வாக்குமூலம் :**

ஸ்ரீ கோகுலம சிட் மற்றும் பைனான்ஸ் கம்பெனி பி.லிமிட்டின் அதிகார முகவர் ஆவேன். மேற்படி நிதி நிறுவனமானது 30 வருடங்களாக முறையாக பதிவு செய்யப்பட்டு இயங்கி வருகிறது. எதிரியானவர் கடந்த 10.02.2017ம் முதல் 10.09.2018 ம் தேதி வரை ரூபாய் 3,00,000/–த்திற்கான ஆண்டு மாத சீட்டில் சீட்டுதாராக எதிரி சேர்ந்ததாகவும், எதிரியின் Ticket No./Group No.G2G/0456/TRY/20 ஆகும், கடந்த 13.06.2017 ம் தேதியன்று எதிரி மாத சீட்டு எடுத்ததாகவும், எதிரி எடுத்த சீட்டின் தொகை 2,23,875/– ஆகும். மேற்படி சீட்டு தொகையை எதிரி தவணை முறையில் செலுத்தி வந்ததாகவும், ஆனால் எதிரியானவர் தவணை தொகையை ஒவ்வொரு மாதமும் உரிய காலத்திற்குள் முறையாக செலுத்தாமல் காலம் கடத்தி செலுத்தி வந்ததாகவும், எதிரி எடுத்த சீட்டு தொகையில் கடந்த 10.12.2025ம் தேதியின்படி நிலுவைதொகை ரூபாய் 5,54,881/– யை எதிரி செலுத்த வேண்டும் என்றும், இந்நிலையில் என்னை நிலுவை தொகை அலுவலராக நியமனம் செய்த பின்பு நான் எதிரியிடம் கடந்த 28.11.2025ம் தேதி நிலுவை தொகையை கேட்ட போது எதிரியானவர் எனது நிதி நிறுவனத்திற்கு கடந்த 11.12.2025ம் தேதியிட்ட 001457 என்ற எண்ணுள்ள உசிலம்பட்டி ICICI Bank வங்கி கிளையின் காசோலையை எதிரி என்னிடம் கொடுத்ததாகவும், அதனை வசூலுக்கு போட்டு நிலுவைத்தொகை எடுத்து கொள்ளுமாறும் கூறியதாகவும், எதிரியின் காசோலையை எடுத்து கொண்டு நிதி நிறுவனம் வைத்துள்ள உசிலம்பட்டி City Union Bank வங்கியில் கடந்த 11.12.2025ம் வசூலுக்கு போட்டதாகவும், ஆனால் எதிரியின் வங்கி கணக்கில் போதிய பணம் இல்லை என எதிரி கொடுத்த காசோலை கடந்த 17.12.2025ம் தேதியன்று திருப்பப்பட்டதாகவும், இதனை அறிந்த வங்கியானது மாற்று முறை ஆவணச்சட்டத்தின் மூலம் வழக்கறிஞர் அறிவிப்பை அனுப்பியதாகவும், அந்த அறிவிப்பிற்கு எதிரி தரப்பில் பதிலறிவிப்பு எதுவும்

அனுப்பவில்லை. 06.10.2025ம் தேதியிட்ட பொது அதிகார ஆவணம் நகல் **ம.சா.ஆ.1** ஆகும் 10.02.2017 முதல் 10.12.2025ம் தேதியிட்ட எதிரியின் கணக்கு பட்டியல் அசல் **ம.சா.ஆ.2** ஆகும், 11.12.2025ம் தேதியிட்ட எதிரி புகார்தாரர் நிதிநிறுவனத்திற்கு வழங்கி காசோலை ஜெராக்ஸ் **ம.சா.ஆ.3** ஆகும், 17.12.2025ம் தேதியிட்ட எதிரி கொடுத்த காசோலை போதிய பணம் இல்லை என்று திருப்பி ரிட்டன் மெமோ அசல் **ம.சா.ஆ.4** ஆகும், 22.12.2025ம் தேதியிட்ட புகார்தாரர் எதிரிக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு அலுவலக நகல் **ம.சா.ஆ.5** ஆகும், புகார்தாரர் அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பை எதிரி பெற்றுக்கொண்டதற்கான ஒப்புதல் அட்டை அசல் **ம.சா.ஆ.6** ஆக குறியீடு செய்யபப்டுகிறது. மனுப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

S.d. Ragu
Taken down be me in open court
Read over to the witness in the
presence of accused and admitted
by HIM correct.
/Sd.G.Sathia Narayanan,B.A.B.L.,
District Munsif cum Judicial Magistrate No.I,
Usilampatti.